bpni

# இந்தியா: உலக தாய்ப்பால் வாரம்

## (1-7 ஆகஸ்ட் 2026)

IBFAN

தாய்ப்பாலை ஆதரிப்போம்

# வாழ்க்கைக்கு நிலையான தொடக்கம் தாய்ப்பாலே: பயனளிக்கும் செயல்களை வலுப்படுத்துவோம்

### உலக தாய்ப்பால் வாரம் 2026 – நோக்கங்கள்

- கைக்குழந்தைகள் மற்றும் இளம் குழந்தைகளுக்கான உணவூட்டல் (IYCF) முறையில், தாய்ப்பால் ஒரு நிலையான மற்றும் சிறந்த வழி என்பதை குடும்பங்களும் சமூகமும் அறிந்து கொள்ளச் செய்தல்.
- தாய்ப்பாலூட்டலைப் பாதுகாக்க, ஊக்குவிக்க மற்றும் ஆதரிக்க வலுவான கொள்கைகள் மற்றும் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லுதல்.
- தாய்ப்பாலூட்டலுக்கு உகந்த சூழலை உருவாக்க அரசுகள், தொழில்முறை அமைப்புகள், சமூகங்கள் மற்றும் தனிநபர்களின் ஒத்துழைப்பை வலுப்படுத்துதல்.



BP-33, பிடாம்புரா, டெல்லி-110034 | +91-11-42683059 | bpni@bpni.org | @bpniindia

# அறிமுகம்

இந்த ஆண்டின் உலக தாய்ப்பால் வாரத்தின் கருப்பொருள், **"வாழ்க்கைக்கு நிலையான தொடக்கம் தாய்ப்பாலே: பயனளிக்கும் செயல்களை வலுப்படுத்துவோம்"** என்பது, குழந்தைகளின் உயிர்வாழ்வு, ஊட்டச்சத்து மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துவதில் தாய்ப்பால் மிகவும் பயனுள்ள தலையீடுகளில் ஒன்றாக இருப்பதை வலியுறுத்துகிறது. மேலும், இது தாய்மார்களின் ஆரோக்கியத்தையும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையையும் ஊக்குவிக்கிறது.

தாய்ப்பால் தயாரிப்பு, பொதியிடல் அல்லது போக்குவரத்து தேவையில்லாததால், குழந்தைகளுக்கு பாதுகாப்பான, சத்தான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த உணவாக அமைகிறது. இதன் மூலம் சுற்றுச்சூழல் பாதிப்பும் குறைகிறது.

இருப்பினும், தாய்ப்பாலூட்டல் என்பது தாயின் முயற்சியால் மட்டுமே வெற்றியடையாது. குடும்பங்கள், சமூகங்கள், பணியிடங்கள், சுகாதார அமைப்புகள் மற்றும் அரசாங்கங்கள் இணைந்து பாதுகாத்து, ஊக்குவித்து, ஆதரிக்கும் சூழல் அவசியமாகும்.

திறமையான ஆலோசனை, மகப்பேறு பாதுகாப்பு, தாய்ப்பாலூட்டலுக்கு உகந்த மருத்துவமனைகள், குழந்தை பால் மாற்றுப் பொருட்கள் (IMS) சட்டம் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுதல் மற்றும் வலுவான சமூக ஆதரவு ஆகியவை ஒவ்வொரு தாயும் வெற்றிகரமாக தாய்ப்பாலூட்ட உதவுகின்றன.

உலக தாய்ப்பால் வாரம் 2026, இந்த ஆதரவு அமைப்புகளை மேலும் வலுப்படுத்தவும், ஒவ்வொரு குழந்தையும் ஆரோக்கியமான மற்றும் நிலையான வாழ்க்கைத் தொடக்கத்தைப் பெற நமது உறுதிப்பாட்டை புதுப்பிக்கவும் ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

# இந்தியாவில் தாய்ப்பாலூட்டல் நடைமுறைகளின் தற்போதைய நிலை

உலகளாவிய மற்றும் தேசிய பரிந்துரைகளின்படி:

- பிறந்த முதல் ஒரு மணி நேரத்திற்குள் தாய்ப்பால் கொடுக்கத் தொடங்குதல்
- முதல் ஆறு மாதங்கள் முழுமையான தாய்ப்பால் மட்டுமே வழங்குதல்
- அதன் பின்னர், பொருத்தமான துணை உணவுகளுடன் இரண்டு வயது அல்லது அதற்கு மேலும் தாய்ப்பாலைத் தொடருதல் பரிந்துரைக்கப்படுகிறது.

தேசிய குடும்ப நலக் கணக்கெடுப்பு (NFHS-6, 2023–24) இந்தியா மருத்துவமனைப் பிரசவங்கள் மற்றும் தாய்–சேய் நலக் குறியீடுகளில் குறிப்பித்தக்க முன்னேற்றம் கண்டிருப்பதை காட்டுகிறது. இருப்பினும், குழந்தை மற்றும் இளம் குழந்தைகளுக்கான உணவூட்டல் (IYCF) தொடர்பான முக்கியக் குறியீடுகள் இன்னும் அவசர கவனம் தேவைப்படுகின்றன.

தேசிய அளவில், பிறந்த முதல் ஒரு மணி நேரத்திற்குள் தாய்ப்பால் கொடுக்கத் தொடங்கும் விகிதம் 50.1% ஆக உயர்ந்துள்ளது. இருந்தாலும், புதிதாகப் பிறக்கும் ஒவ்வொரு இரண்டு குழந்தைகளில் ஒருவருக்கு இந்த வாய்ப்பு இன்னும் கிடைப்பதில்லை.

மேலும், ஆறு மாதங்களுக்குக் குறைவான குழந்தைகளுக்கு முழுமையான தாய்ப்பால் அழங்கும் விகிதம் NFHS-5 இல் 63.7% இலிருந்து NFHS-6 இல் 55.8% ஆகக் குறைந்துள்ளது.


மேலும், 6–23 மாத வயதுடைய குழந்தைகளில் 15.3% பேருக்கு மட்டுமே குறைந்தபட்ச ஏற்றுக்கொள்ளத்தக்க உணவு கிடைக்கிறது. இது துணை உணவளிப்பில் தொடர்ச்சியான இடைவெளி இருப்பதை எடுத்துக்காட்டுகிறது.

டெல்லி மற்றும் ஒடிசா உள்ளிட்ட சில மாநிலங்களில், பிறந்த முதல் ஒரு மணி நேரத்திற்குள் தாய்ப்பால் கொடுக்கும் நடைமுறை குறைந்துள்ளது. அதேபோல், ஹரியானா, உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், டெல்லி மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களில் முழுமையான தாய்ப்பாலூட்டல் விகிதமும் குறைந்துள்ளது.


இந்தத் தகவல்கள் பின்வரும் நடவடிக்கைகளின் அவசியத்தை வலியுறுத்துகின்றன:

- தாய்ப்பாலூட்டல் ஆலோசனையை வலுப்படுத்துதல்
- மருத்துவமனை நடைமுறைகளை மேம்படுத்துதல்
- குழந்தை உணவுப் பொருட்களின் வணிக விளம்பரங்களிலிருந்து குடும்பங்களைப் பாதுகாத்தல்
- மகப்பேறு பாதுகாப்பை விரிவுபடுத்துதல்
- ஒவ்வொரு தாயும் வெற்றிகரமாக தாய்ப்பாலூட்ட வலுவான சமூக ஆதரவு அமைப்புகளை உருவாக்குதல்

**வரைபடம் 1**
**இந்தியாவில் முழுமையான தாய்ப்பாலூட்டல் விகிதங்களின் போக்கு (%)**




**வரைபடம் 2**
**பிறந்த முதல் ஒரு மணி நேரத்திற்குள் தாய்ப்பால் தொடங்குதல் மற்றும் மருத்துவமனைப் பிரசவங்களின் போக்கு (%)**



# WBTi இந்தியா 2025 அறிக்கையின் முக்கிய கண்டுபிடிப்புகள்

**உலக தாய்ப்பால் போக்குகள் முன்னெடுப்பு (WBTi) இந்தியா 2025 அறிக்கை, இந்தியாவின் தாய்ப்பால் பாதுகாப்பு, ஊக்குவிப்பு மற்றும் ஆதரவு கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை 10 முக்கியக் குறியீடுகளின் அடிப்படையில் முழுமையாக மதிப்பீடு செய்கிறது.** தாய்ப்பால் ஊக்குவிப்பு வலையமைப்பு இந்தியா (BPNI) ஒருங்கிணைப்பில், தெளிவான, பலகூட்டு மற்றும் ஆதார அடிப்படையிலான மதிப்பீட்டின் மூலம் இந்த அறிக்கை, பலங்களையும், நடைமுறை இடைவெளிகளையும் மற்றும் முன்னுரிமை பரிந்துரைகளையும் அடையாளம் காண்கிறது. இது தாய்ப்பால் கொள்கைகள் மற்றும் முடிவுகளை மேம்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை வழங்குகிறது.



உடனடி கவனம் தேவைப்படும் மூன்று முன்னுரிமைக் குறியீடுகளை இந்த மதிப்பீடு வலியுறுத்துகிறது:

- ஒவ்வொரு தாயாரும் பிறப்பிலிருந்தே திறமையான உதவியைப் பெற, சுகாதார அமைப்புகளில் தாய்ப்பால் ஆதரவை வலுப்படுத்துதல்.
- குழந்தை பால் மாற்றுப் பொருட்கள், பாட்டில்கள், மற்றும் குழந்தை உணவுகள் ஆகியவற்றின் பொருத்தமற்ற வணிக விளம்பரங்களை தடுக்கும் வகையில் IMS சட்டத்தை திறம்பட செயல்படுத்துதல்.
- ஒவ்வொரு பணியாற்றும் தாயாருக்கும் போதிய மகப்பேறு பாதுகாப்பு, வருமான பாதுகாப்பு மற்றும் பணியிட ஆதரவு கிடைப்பதை உறுதி செய்து, தாய்ப்பாலூட்டலைத் தொடர உதவுதல்.

இந்த முன்னுரிமை செயல்திட்டங்கள், தாய்ப்பால் நடைமுறைகளை சிறப்பாக்கும் மற்றும் தாய் மற்றும் சேய் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் முன்னேற்றப் பயணத்திற்கான ஒரு தெளிவான வழிக்காட்டுதலை வழங்குகின்றன.

# சிறந்த தாய்ப்பாலூட்டல் நடைமுறைகளை உருவாக்க தாய்ப்பால் கொள்கைகள் மற்றும் திட்டங்களை வலுப்படுத்துதல்

## தாய்ப்பாலுக்கு ஆதரவளிக்கும் மருத்துவமனை நடைமுறைகளை மேம்படுத்துதல்

தாய்ப்பாலூட்டல் ஒரு இயற்கையான செயல்முறை. இருப்பினும், இது திறமை தேவைப்படும் ஒரு கற்றுக்கொள்ளக்கூடிய திறன். பிறந்த முதல் சில மணி நேரங்களும் நாட்களும் தாய்ப்பாலைத் தொடங்கி நிலைநிறுத்துவதற்கு மிக முக்கியமானவை. தாயார்களுக்கு திறமையான ஆலோசனை, ஊக்கமும் மற்றும் நடைமுறை உதவியும் தேவைப்படுகிறது, இதனால் ஆரம்பத்திலேயே தாய்ப்பாலைத் தொடங்கி, ஆறு மாதங்கள் வரை முழுமையாக தாய்ப்பால் கொடுப்பதைத் தொடர முடியும்.

மருத்துவமனைகளில் பிரசவ விகிதங்கள் அதிகமாக இருந்தாலும், தாய்ப்பாலைத் தடுக்கக்கூடிய பல சவால்கள் இன்னும் நீடிக்கின்றன. அவை: தாய்ப்பாலுக்கு ஏற்ற மருத்துவமனை கொள்கைகள் இல்லாமை, பயிற்சி பெற்ற தாய்ப்பால் ஆலோசகர்கள் பற்றாக்குறை, போதிய பணியாளர்கள் இல்லாமை, பிறந்தவுடனே தாய்ப்பால் கொடுப்பதற்கான தாமதம், தாயும் குழந்தையும் தேவையற்ற பிரிவு, குழந்தை பால் மாற்றுப் பொருட்களின் பொருத்தமற்ற பயன்பாடு, போதிய தாய்ப்பால் ஆலோசனை இடங்கள் இல்லாமை மற்றும் குழந்தை உணவு நிறுவனங்களின் தொடர்ச்சியான வணிக செல்வாக்கு ஆகியவை இகும்.





# தாய்ப்பால் பாதுகாப்பிற்கான கொள்கையாக IMS சட்டத்தைச் சிறப்பாக நடைமுறைப்படுத்தல்


குழந்தை பால் மாற்றுப் பொருட்கள், பாட்டில்கள், குழந்தை உணவுகள் ஆகியவற்றின் வாணிக விளம்பரங்கள், தாய்ப்பால் ஊட்டும் நடைமுறைகளை பாதிக்கும்.

இதிலிருந்து தாய்ப்பாலை பாதுகாக்க சர்வதேச அளவில் ஏற்கப்பட்ட மிக வலிமையான சட்டங்களில் ஒன்றாக இந்தியாவில் 1992 ஆம் ஆண்டு (2003 ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்ட) குழந்தை பால் மாற்றுப் பொருட்கள், பாட்டில்கள் மற்றும் குழந்தை உணவுகள் (உற்பத்தி, விநியோகம் மற்றும் வழங்கல் ஒழுங்குமுறை) சட்டம் (IMS சட்டம்) உள்ளது. அதன் நடைமுறை இன்னும் சீராக இல்லை.

இந்த IMS சட்டம், குழந்தை பால் மாற்றுப் பொருட்களை, உணவு மற்றும் ஊட்டும் உபகரணங்களை 2 வயது வரை எந்தவித ஊடகங்களின் மூலம் விளம்பரப்படுத்தவும் மற்றும் பாட்டில் பால் மற்றும் உணவுகளுக்கான விளம்பரங்களின் போது அனைத்து வகை லேபிள் கட்டுப்பாடுகளையும் விதிக்கிறது.

இருப்பினும், சுகாதார நிலையங்கள், டிஜிட்டல் மற்றும் சமூக வலைதளங்கள், ஆன்லைன் சந்தை தளங்கள், பிரபலங்களின் ஆதரவு, தள்ளுபடி சலுகைகள் மற்றும் பிற கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மூலம் இந்த சட்டத்தின் மீறல்கள் தொடர்ந்து பதிவாகி வருகின்றன. உலக தாய்ப்பால் ஊட்டல் கூட்டணி இந்தியா (WBTi India) 2025 அறிக்கையில், கண்காணிப்பு பலவீனம், அமுலாக்கம் குறைவு மற்றும் பொறுப்புக் கோருதல் இல்லாமை ஆகியவை முக்கிய தடைகளாக உள்ளன என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

தாய்ப்பாலைப் பாதுகாப்பதற்கு அரசுகள், சுகாதார நிறுவனங்கள், தொழில்முறை அமைப்புகள் மற்றும் சமூக அமைப்புகள் ஒருங்கிணைந்து, தாய்மார்கள் தவறான வாணிக தகவல்களிலிருந்து பாதுகாக்கப்பட்டு, சரியான தகவல்களைப் பெறுவதை உறுதி செய்ய வேண்டும்.




தாய்ப்பாலைப் பாதுகாப்பது, குடும்பங்களை தவறான வாணிக விளம்பரங்களிலிருந்து காப்பதிலிருந்து தொடங்குகிறது. IMS சட்டத்தைச் சிறப்பாக நடைமுறைப்படுத்துவதே, பெற்றோர்கள் குழந்தைகள் உணவு குறித்து சரியான, நம்பகமான தகவல்களை பெறுவதை உறுதி செய்யும் முக்கியமான படியாகும்.

# அனைத்து தாய்மார்களுக்கும் மகப்பேறு பாதுகாப்பு வழங்குதல்

இந்திய அரசியலமைப்பின் 42-வது கட்டுரை, வேலை மற்றும் மகப்பேறு நிலைகளில் நீதி மற்றும் மனிதாபிபானமான நிபந்தளைகளை அரசு வழங்க வேண்டும் என்று வழிகாட்டுகிறது. மகப்பேறு பாதுகாப்பு, குறிப்பாக வாழ்க்கையின் முதல் ஆறு மாதங்களில் தாய்ப்பாலைத் தொடங்கி தொடர்ந்து வழங்க தாய்மார்களுக்கு அவசியமானதாகும்.

தாய்ப்பாலூட்டலை ஆதரிக்க, இந்திய அரசு முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மகப்பேறு நல சட்டம் 1961 (2017 திருத்தம்) படி, தகுதியுள்ள பெண்களுக்கு முதல் இரண்டு குழந்தைகளுக்கு 26 வாரங்கள் ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு வழங்கப்படுகிறது. 50 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் உள்ள நிறுவங்களில் நர்சரி / கிரேச் வசதி வழங்குவது கட்டாயமாகும். இயன்ற இடங்களில் வீட்டிலிருந்து பணிபுரியும் வசதியும் வழங்கப்பட வேண்டும். இன்னை பூர்த்தியாக, தாய் பாதுகாப்பு முழுமையாக (Mother's Absolute Affection – MAA) திட்டம், தாய்ப்பாலை ஊக்குவிக்க ஆலோசனை மற்றும் பயிற்சி பெற்ற ஆதரவை வழங்குகிறது.

பிரதான் மந்திரி மாத்ரு வந்தான யோஜனா (PMMVY) திட்டம், தகுதியுள்ள கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊதிய இழப்பீட்டை வழங்குகிறது.

இருப்பினும், இத்திட்டங்கள் இருந்தபோதிலும் பெரிய இடைவெளிகள் நீடிக்கின்றன. ஒழுங்கற்ற துறைப்பணியாளர்களில் பெரும்பாலான பெண்கள் இன்னும் மகப்பேறு விடுப்பு மற்றும் நலத்திட்ட பலன்களை பெறுவதில்லை. மகப்பேறு உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு குறைவாக உள்ளது. பல பணியிடங்களில் தாய்ப்பாலூட்டலுக்கு உகந்த வசதிகள் மற்றும் சூழல் இன்னும் இல்லாமலே உள்ளன.

ஒவ்வொரு உழைக்கும் தாய்க்கும் நேரம், பாதுகாப்பு மற்றும் ஆதரவு கிடைக்க வேண்டும். மகப்பேறு பாதுகாப்பில் முதலீடு செய்வது, ஆரோக்கியமான குழந்தைகள், ஆரோக்கியமான தாய்மார்கள் மற்றும் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கும்.



# உலக தாய்ப்பால் வாரம் 2026

# செயல் திட்டக் கருத்துகள்

## அரசுத் துறைகள்

சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை (MoHFW), IMS சட்டம் மற்றும் MAA திட்டம் செயல்படுத்தல் குறித்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கான மாநில மற்றும் மாவட்ட மட்ட விழிப்புணர்வு கூட்டங்களை நடத்தலாம். ஆறிப்பசு NFHS-6 இன் தாய்ப்பால் கொடுப்பதைப் பிறந்த முதல் ஒரு மணி நேரத்திற்குள் தொடங்குவதரல் குறைந்துள்ள மாநிலங்களுக்கு கவனம் செலுத்தலாம்.

FSSAI, IMS சட்ட விதிகள், அபராதங்கள் மற்றும் அவற்றின் செயல்படுத்தலில் உணவு பாதுகாப்பு அலுவலர்களின் பங்கு குறித்து மாநில மட்டத்தில் பயிற்சி பட்டறைகளை நடத்தி, IMS சட்டத்தை உறுதியாக செயல்படுத்தலாம்.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை (MoLE), ஒழுங்கற்ற மற்றும் ஒழுங்கமான பணியிடங்களில் மகப்பேறு பாதுகாப்புச் சட்டம், அதன் விதிகள் மற்றும் தாய்ப்பாலூட்டல் ஆதரவை வலுப்படுத்தலாம். குறைதிர்க்கும் இணையத் தளத்தில் பெறப்படும் புகார்களை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கலாம்.

## சுகாதார வசதிகள்

தாய்ப்பாலூட்டல் கொள்கையை உருவாக்கி, அதை கண்காணிக்க குழுவை அமைக்கவும். ANC காலத்திலிருந்தே தாய்ப்பாலூட்டல் ஆலோசனையை தொடங்கி, கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரை விழிப்புணர்வுபடுத்தவும்.

மகப்பேறு சேவைகள் வழங்கும் அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளும் தாய்ப்பாலூட்டலுக்கு உகந்த மருத்துவமனை மதிப்பீட்டை (BFHI) நடத்து, கர்ப்பிணி மற்றும் தாய்ப்பாலூட்டும் பெண்களுக்கான பராமரிப்பின் தரமாக அங்கீகாரம் பெற வேண்டும். மேலும் விவரங்களுக்கு bfhi-india.in இணையதளத்தை பார்வையிடவும்.

## குடிமைச் சங்கங்கள் மற்றும் சமூகங்கள்

குழந்தை பால் மாற்றுப் பொருட்கள், பாட்டில்கள் மற்றும் குழந்தை உணவுப் பொருட்களின் தவறான விளம்பரங்களை மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் மூலமாக CEO, FSSAI மற்றும் BPNI-க்கு bpni@bpni.org என்ற மின்னஞ்சலுக்கு அறிக்கையிடவும்.

கர்ப்பத்தை திட்டமிடும் குடும்பங்கள் தாய்ப்பாலூட்டலுக்கு உகந்த மகப்பேறு மருத்துவமனைகளைத் தேர்வு செய்யவும் மற்றும் கோரவும். குழந்தைக்கு சிறந்த தொடக்கத்தை உறுதி செய்யவும். கர்ப்ப காலத்திலேயே தாய்ப்பாலூட்டல் ஆலோசனையை கேட்டு தொடங்கவும்.

மகப்பேறு நன்மைகள் சட்டம் மற்றும் பிற மகப்பேறு உரிமைகள் குறித்து உங்கள் வலைப்பின்னல்கள் மற்றும் சமூகங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும். கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் தாய்ப்பாலூட்டும் பெண்கள் தங்களது உரிமைகள் மீறப்பட்டால் அல்லது மறுக்கப்பட்டால் samadhan.labour.gov.in இணையத் தளத்தில் புகாரளிக்க ஊக்குவிக்கவும்.


bpni
சிறந்த ஊட்டச்சத்து
சிறந்த எதிர்காலம்

IBFAN
தாய்ப்பாலூட்டலை
பாதுகாப்போம்

**தாய்ப்பாலூட்டல் ஊக்குவிப்பு வலையமைப்பு – இந்தியா (BPNI)**
முகவரி: BP-33, பிடாம்புரா, டெல்லி 110034.
தொலைபேசி: +91-11-4268 3059

bpni@bpni.org
http://www.bpni.org
@bpniindia
@bpni.org
https://www.youtube.com/user/bpniindia


### BPNI பற்றி

தாய்ப்பாலூட்டல் ஊக்குவிப்பு வலையமைப்பு – இந்தியா (BPNI) என்பது 34 ஆண்டுகள் பழமையான பதிவு செய்யப்பட்ட, இலாப நோக்கற்ற, தேசிய அமைப்பாகும். இது தாய்ப்பாலூட்டலை பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும், ஆதரிக்கவும் மற்றும் 0–2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பொருத்தமான துணை உணவுகளை ஊக்குவிக்கவும் கொள்கை ஆய்வு, சமூக இயக்கம், தகவல் பகிர்வு, கல்வி, பயிற்சி மற்றும் IMS சட்டத்தின் கீழ் நிறுவனங்களின் இணக்கப்பாட்டை கண்காணிப்பு போன்ற பணிகளில் ஈடுபடுகிறது. BPNI உலக தாய்ப்பாலூட்டல் ஊக்குவிப்பு (WBTi) சிலவித்த ஒருங்கிணைப்பு அமைப்பாக செயல்படுகிறது. மேலும், பல்வேறு நாடுகளில் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் ஆய்வு, மதிப்பாய்வு மற்றும் செயல்பாட்டை ஊக்குவிக்கிறது. BPNI, சர்வதேச குழந்தை உணவு நடவடிக்கை வலையமைப்பு (IBFAN) உறுப்பினர் ஆகும்.

### BPNI-ன் ஒழுக்கக் கொள்கை

BPNI, குழந்தை பால் மாற்றுப் பொருட்கள், பாட்டில்கள் அல்லது தொடர்புடைய உபகரணங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய அமைப்புகளிடமிருந்து நிதி அல்லது ஆதரவுகள் ஏற்காது: உலக தாய்ப்பாலூட்டல் வாரத்தை கொண்டாடும் போது BPNI தனது ஒழுக்க நெறிமுறைகளைப் பின்பற்றுகிறது.


தமிழாக்கம் மற்றும் தொகுப்பு: டாக்டர். ஜே.பி. தாதிச்ச, டாக்டர். அருண் குப்தா மற்றும் டாக்டர். நுபூர் பிட்லா

வடிவமைப்பு: அமித் தாஹியா

**தமிழாக்கம் மற்றும் திருத்தம்:**

**DR. Manjubala Dash, Principal,**
**Mother Theresa Post Graduate and Research Institute of Health Sciences, Karaikal**

**Ms.A.Priyadharshini**
**Assistant Lecturer,**
**Mother Theresa Post Graduate and Research Institute of Health Sciences, Karaikal**